**O.S.157/2021**

Date : 11.10.2023

பி.சா.1 : தங்கராஜா

<u>பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி என்றால் சரிதான். என் தாத்தா தங்க சாமி நாடார் சர்வே எண்.383/6 , 19.12.1979 ல் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சர்வே நம்பரில் உள்ள சொத்தை வழக்கின் என் தகப்பனாரான 1ம் பிரதிவாதி எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் 28.05.2013 ல் நன்கொடை ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். வாதி சாமுவேல் நாடார் இந்த வழக்கில் சர்வே எண்.383/6C யை தபசிலாக காண்பித்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதிகளான எங்கள் மீது வாதி 12.07.2018 ல் மூன்றடைப்பு காவல் நிலையத்தில் வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்ய கூடாது என்று ஒரு புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுத்தார். ஆனால் அனுபவம் நாங்கள்தான் வைத்துள்ளோம். புகாருக்கு பின்புதான் நாங்கள் பட்டா வேண்டி நான்குநேரி வட்டாட்சியரிடம் விண்ணப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். என் தாத்தா கிரையம் வாங்கிய 1979 காலத்திலும் என் அப்பா அனுபவம் செய்த காலத்திலும், என் அப்பா எங்களுக்கு 2013 ல் செட்டில் மெண்ட் எழுதி கொடுத்த காலத்திலும் பட்டா விண்ணம் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா வேண்டி நான்குநேரி வட்டாட்சியரிடம் விண்ணப்பம் செய்த காலத்தில்தான் நிலம் நத்தமாக எங்களுடைய நன்கொடை ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்று வட்டாட்சியர்தான் தகவல் கூறினார் என்றால் சரிதான். வட்டாட்சியர் எங்களுடைய பத்திரத்தில் நிலமானது நத்தம் என்று காட்டப்பட்டுள்ளதாகவும் ஆனால் வகைப்பாட்டில் அது புஞ்சை நிலமாக இருப்பதால் அந்த பத்திரத்தை சீர்திருத்தம் செய்வதற்காக அறிவுறுத்தினார் என்றால் சரிதான். அதன்பின்புதான் நத்தம் என்று காட்டிய பத்திரத்தை புஞ்சை என்று 2018 ல் சீர்திருத்தம் செய்த பின்புதான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).